மே – 27

# TNPSC துளிகள்

- சுகாதாரத்துறையில் சமநிலைப்படுத்தப்பட்ட விரிவாக்கத்தை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய்வதற்காகவும், அது தொடர்பான பரிந்துரைகளை அளிப்பதற்காகவும் பதினைந்தாவது நிதிக்குழுவானது ஒரு உயர்மட்டக் குழுவினை அமைத்துள்ளது. டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் இரண்தீப் குலேரியர் இந்த உயர்மட்டக்குழுவின் தலைவர் ஆவார். மேலும், இக்குழுவில் நாடு முழுவதிலும் இருந்து சுகாதாரத் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் இடம் பெறுவர்.
- ஹாக்கி இந்தியா அமைப்பின் தலைவர் பதவிக்கு ஹாக்கி இந்தியா அமைப்பின் மூத்த துணைத் தலைவரான இராஜிந்தர் சிங்கின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறையானது தற்போதைய தலைவரான மாரியம்மா கோசியின் ராஜினாமாவைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.
- அமெரிக்காவின் நகர காவல்துறையில் முதல் டர்பன் அணிந்த சீக்கிய பெண் துணை காவல் அதிகாரியாக குருசாச்கவுர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பதவியில் நியமிக்கப்படும் முதல் இந்தியப் பெண்ணும் இவரே ஆவார்.

# தேசியச் செய்திகள்

## சம்கிரா சிக்சா திட்டம்

- பள்ளிக் கல்வியின் தரத்தை அதிகரிப்பதற்காக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் சம்கிரா சிக்சா திட்டத்தை தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டம் பின்வரும் மூன்று திட்டங்களை ஒன்றிணைத்து தொடங்கப்பட்டது. அவையாவன,
    - அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA)
    - இராஷ்டிரிய மத்யமிக் சிக்சா அபியான் (RUSA)
    - ஆசிரியர் கல்வி (TE)
- இத்திட்டமானது, முன்பருவக் குழந்தைக் கல்வி (Preschool) முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலான பள்ளிக் கல்வியை முழுமையாக கருத்தில் கொண்டு திட்டங்களை செயல்படுத்துகிறது.
- சம்கிரா சிக்சா திட்டமானது, முன்பருவக் குழந்தைக் கல்வி முதல் உயர்நிலைக்கல்வி வரை மாநிலங்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட ஆதரவினை வழங்குகிறது.
- இத்திட்டம், முந்தைய திட்டங்களின் கூறுகளை உள்ளடக்குவதுடன் 2T என்று அழைக்கப்படும் ஆசிரியர் மற்றும் தொழில்நுட்பம் (Teacher and Technology - 2Ts) ஆகிய இரண்டிற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. இத்திட்டம் டிஜிட்டல் முறை கல்வியின் மீது கவனம் செலுத்துகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## 71-வது உலக சுகாதார மன்றம்

- 71-வது உலக சுகாதார மன்றம் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவாவில் நடைபெற்றது.
- இந்த நிகழ்ச்சியானது, "அனைவருக்கும் சுகாதாரம்: உலகளாவிய சுகாதார உள்ளடக்கத்திற்கு உறுதியளிப்பு" (Health for All: Commit to Universal Health Coverage) எனும் கருத்துருவின் அடிப்படையில் நடைபெற்றது.
- இந்த உலக சுகாதார மன்றத்தில் மத்திய சுகாதார அமைச்சர் ஜே.பி.நட்டா தலைமையிலான இந்தியக்குழு பங்கேற்றது.
- திரு.நட்டா "Walk the Talk" நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து "அனைவருக்கும் சுகாதாரம், அனைவருக்கும் யோகா" என்ற கருத்தை வலியுறுத்தினார்.

# பொருளாதாரச் செய்திகள்

## நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக் குழு

- நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக் குழுவினை மத்திய அரசு மீண்டும் அமைத்துள்ளது. இக்கழகம் வருவாய்த்துறை செயலாளர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சக செயலாளர்கள் ஆகியோரை கொண்டிருக்கும்.
- மேலும் இக்குழுவானது இந்திய திவால் வாரியத்தின் (Insolvency and Bankruptcy Board of India - IBBI) தலைவரையும் உள்ளடக்கும்.
- நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக் குழுவானது நிதியியல் துறையை முறைப்படுத்தும் சிறப்பு ஒழுங்குமுறை அமைப்பாகும். நாட்டின் பொருளாதாரத்தில் திறனான மற்றும் ஆரோக்கியமான நிதியியல் அமைப்பினை ஏற்படுத்துவதற்கு முக்கியமான ஒன்றாக இவ்வமைப்பு கருதப்படுகிறது.
- நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக் குழுவின் தலைவர் மத்திய நிதியமைச்சராவார். நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக் குழுவானது 2010 ஆம் ஆண்டு அப்போதைய நிதியமைச்சரான பிரணாப் முகர்ஜி அவர்களால் அமைக்கப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## தரவுகளை காட்சிப்படுத்தும் செயலி

- யுனிசெஃப் அமைப்பானது இந்தியாவில் கல்விச் சூழ்நிலைகளின் சிக்கலான பகுப்பாய்வுகளை எளிய முறையில் காட்சிப்படுத்தி மக்களுக்கு வழங்குவதற்காக தரவுகள் காட்சிப்படுத்தல் செயலியை வெளியிட்டுள்ளது.
- இந்த செயலியானது, யுனிசெஃப்பின் தொழில்நுட்ப உள்ளீடுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டது. இச்செயலி பின்வரும் அமைப்புகளுடன் யுனிசெஃப்பின் கூட்டிணைவால் உருவாக்கப்பட்டுள்ளது.
  - தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம் (National Council of Educational Research and Training - NCERT)

- கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றிற்கான தேசிய நிறுவனம் (The National Institute of Educational Planning and Administration - NIEPA)

❖ இந்த செயலி, கல்விக்கான ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட தகவல் அமைப்பு (Unified District Information System for Education - UDISE), தேசிய மதிப்பீட்டு ஆய்வு (National Achievement Survey - NAS) மற்றும் மக்கள் தொகை தரவு ஆகியவற்றை பயன்படுத்துகிறது.

❖ இந்த செயலியானது, கல்வித் துறையில் உள்ள இடைவெளிகளை குறிப்பிட்டுக்காட்ட மற்றும் கல்வித்துறை தொடர்பான திட்டங்களை கண்காணிப்பதற்கான ஒரு காட்சிப்படுத்தல் கருவி ஆகும்.

❖ யுனிசெஃப் இந்தியா அமைப்பானது மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்துடன் கூட்டிணைந்து சிக்சா மேளா தினத்தை நடத்தியது.

# மாநிலச் செய்திகள்

## My MP Rojgar இணையவாயில்

❖ மத்தியப் பிரதேச மாநில முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் My MP Rojgar இணையவாயிலை தொடங்கி வைத்துள்ளார்.

❖ இந்தத் இணையவாயிலானது, இளைஞர்களுக்கு அவர்களது கல்வித் தகுதி, திறமைகள் மற்றும் ஆர்வம் ஆகியவற்றின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டது.

❖ மேலும் இந்த இணையவாயில், வேலைவாய்ப்பு வழங்குபவர்களுக்கு தங்கள் வணிகத்தின் தேவையின் அடிப்படையில் திறனான நபர்கள் கிடைப்பதை எளிதாக்குகிறது.

❖ இத்திட்டமானது, போபாலிலுள்ள மாதிரிப் பள்ளியில் பஹல் நிறுவனத்தால் நடத்தப்பட்ட முதலமைச்சர் வேலைவாய்ப்பு கலந்தாய்வு திட்டமான "சு லெங்கே அஸ்மானின்" (Chhu Lenge Asman) ஒரு பகுதியாக தொடங்கப்பட்டது.

❖ இந்த இணையவாயில் இளைஞர்களுக்கு திறன் அளிக்கும் திட்டத்தின் கீழ் மத்தியப் பிரதேச திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்க வாரியத்தினால் உருவாக்கப்பட்டது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இந்திய உயிர் பல்வகைமை விருது 2018

❖ அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த அரசு சாரா அமைப்பான சிங்சுங் புகன் சமூக காப்புக் காட்டிற்கு (Singchung Bugun Community Reserve - SBVCR) வனவிலங்கு இனங்களின் பாதுகாப்பு' என்ற பிரிவின்கீழ் 2018 ஆம் ஆண்டிற்கான இந்திய உயிர் பல்வகைமை விருது வழங்கப்பட்டுள்ளது.

❖ இவ்விருதானது, இந்நிறுவனத்திற்கு, அரிதான மற்றும் உயர் அச்சுறுதல் நிலையில் (Critically Endangered) உள்ள பறவையான புகன் லியோசிச்லாவை (Bugun Liocichla) பாதுகாப்பதற்கு எடுத்த முயற்சிகளுக்காக வழங்கப்பட்டது.

❖ இந்த விருதானது பின்வருவனவற்றின் கூட்டு முயற்சியாகும்.

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாட்டு அமைச்சகம் (Ministry of Environment, Forest and Climate Change - MoEFCC)
- தேசிய உயிர்பல்வகைமை ஆணையம் (National Biodiversity Authority - NBA)
- ஐ.நா.வின் மேம்பாட்டுத்திட்டம் (United Nations Development Programme - UNDP)

❖ இந்தப் பறவையானது ஒரு புதிய பறவையாக 2006 ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்டது. 1947லிருந்து இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரே புதிய பறவையினம் இதுவே ஆகும்.



❖ இப்பறவைகளை காப்பதற்கு புகுன் பழங்குடியினர் எடுத்த முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாக இப்பறவை இனத்திற்கு புகுன் லியோசிச்லா என்று பெயர் சூட்டப்பட்டது.

## விளையாட்டுச் செய்திகள்

### ஃபார்முலா ஜூனியர் கார் பந்தயத் தொடர் 2018 சேம்பியன் ஷிப்

❖ தமிழ்நாட்டின் கோயமுத்தூரில் நடைபெற்ற ஃபார்முலா ஜூனியர் கார் பந்தயத் தொடர் 2018 சேம்பியன்ஷிப் போட்டியில் கோயமுத்தூரைச் சேர்ந்த கார் பந்தைய வீரரான பாலா பிரசாத் வெற்றி பெற்றுள்ளார்.

❖ ஃபார்முலா ஜூனியர் கார் பந்தயத் தொடர் 2018 சேம்பியன்ஷிப் போட்டியானது MECO மோட்டார் ஸ்போர்ட்ஸ்-ஆல் நடத்தப்பட்டது. 2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்போட்டியானது, பந்தயக் கார்களின் ஓட்டுநர்களுக்கு தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்பதற்கு தம்மை தயார் செய்வதற்கான தளத்தை வழங்குகிறது.

❖ இந்தப் போட்டியில் முறையான FMSCI தேசிய கார்பந்தய உரிமம் கொண்டுள்ள பதினான்கு வயதிற்கு மேற்பட்ட எவரும் பங்கேற்கலாம். இப்போட்டி FMSCI (Federation of Motor Sports Clubs of India) அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட போட்டியாகும்.

- - - - - - - - - - - - - -